இது ஓர்
இலவச வெளியீடு

நிலா

சங்கீதா அச்சகம்
39, Bld de la Chapelle
Métro : La Chapelle
☎ 01 44 72 08 94

பங்குனி - சித்திரை 2010 இது கிருஷ்ணா அச்சகத்தின் விளம்பர வெளியீடு இல.2

பிரெஞ்சு

மாகாணசபைத் தேர்தலில் பெரும் ரோஸ் அலை

மார்ச்சில் நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தலில் ஜனாதிபதி நிக்கொலா சார்க்கோஸியின் கட்சியான UMP படுதோல்வியைத் தழுவியுள்ளது. கூட்டணியாகப் போட்டியிட்ட இடதுசாரிக் கட்சிகள் மாபெரும் வெற்றியை ஈட்டியுள்ளன. இருபத்திரண்டு தேர்தல் தொகுதிகளில் UMP ஒன்றே ஒன்றில் மட்டுமே வெற்றிபெற்றது. Alsace தொகுதியே தக்கவைத்துக் கொள்ளப் பட்டது.

இடதுசாரிக் கூட்டணியில் சோஸலிசக்கட்சி Partie Socialiste (PS) , ஐரோப்பிய சூழலியல் கட்சி Europe Ecologiste , இடதுசாரி முன்னணி Front du gauche ஆகிய கட்சிகள் கூட்டாகப் போட்டியிட்டிருந்தாலும் PS இன் ரோஸ் அலையே பெரும்பான்மையான இடங்களில் வீசியது. PS கட்சியின் சின்னம் ரோஜா என்பது குறிப்பிடத்தக்கது இதன் தலைவியாக Martine Aubry இருக்கிறார்.

உலகின் மிகச் சிறந்த நாடாக பிரான்ஸ்

சர்வதேச சுற்றுலா வாரஇதழ் ஒன்று மக்களின் வாழ்க்கைத்தர அடிப்படையில் 2010 ஆம் ஆண்டின் சிறந்த நாடுகள் பட்டியலை வெளியிட்டுள்ளது. அனைத்துப் பிரிவுகளிலும் அதிக புள்ளிகளை பெற்று சிறந்த நாடுகள் பட்டியலில் பிரான்ஸ் முதலிடத்தைப் பெற்று தொடர்ந்து ஐந்தாண்டுகளாக இப்பெருமையை தனதாக்கியுள்ளது.

ஆஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து, ஜேர்மனி உள்ளிட்ட நாடுகள் அடுத்தடுத்த இடங்களை பெற்றுள்ளன. அமெரிக்கா ஏழாவது இடத்தில் உள்ளது.

உலகின் 194 நாடுகளை, 8 பிரிவுகளில் வகைப்படுத்தி 30 ஆண்டுகளாக இப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் வாழ்வாதாரம், கலாச்சாரம், பொருளாதாரம், சுகாதாரம், உட்கட்டமைப்பு, பருவநிலை போன்றவை முக்கிய அம்சமாக கொள்ளப்படுகின்றன.

Bac க்கான தமிழ்ப்பரீட்சை

Le Bac எனச் சுருக்கமாகச் சொல்லப்படும் Le baccalaureat சான்றிதழுக்கான தமிழ்ப்பரீட்சை மார்ச் 26 அன்று இடம்பெற்றது. இப்பரீட்சைக்குப் பல மாணவர்கள் தோற்றினார்கள். பன்னிரண்டாம் வகுப்பான la terminale – லாத் தேர்மினல் வகுப்பு மாணவர்கள் தமிழை ஒரு விருப்பப்பாடமாக பரீட்சையில் எடுத்துக்கொள்ளும் நல்வாய்ப்பு இருப்பது பலரும் அறிந்ததே. பிரதான பாடங்களுக்கான பரீட்சை யூனிலேயே நடைபெறும். ஆனால் மாணவர்களின் விருப்பப்பாடமாக இருக்கும் தமிழ் போன்ற பிறமொழிகளின் பரீட்சை பெரும்பாலும் மார்ச்சிலேயே நடைபெறும்.

இவ்வாண்டுப் பரீட்சையில், அறிஞர் அண்ணா 1950 இல் எழுதிய ரங்கோன் ராதா நாவலிலிருந்து ஒரு சிறுபகுதி வினாவாக அமைந்திருந்தது. தமிழில் இருந்த நாவலின் பகுதி தொடர்பாக பிரெஞ்சில் வினாக்கள் இருந்தன. மொழிபெயர்ப்பும் ஒரு வினாவாக இருப்பது வழக்கம்.

சமத்துவம் — சகோதரத்துவம் — சுதந்திரம் + மதச்சார்பின்மை?

பிரான்சில் உள்ள ஜூஏ-லெ-ரூர் (Joué-les-tours) என்ற நகரசபை முன்றலில் சுதந்திரம் - சமத்துவம் - சகோதரத்துவம் என்ற இலச்சனையுடன் மதமின்மைத்துவம் என்ற சொல்லும் தற்போது பொறிக்கப்பட்டுள்ளது.

சோசலிசக் கட்சியைச் சேர்ந்த நகர பிதாவினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கிணங்க மதச்சார்பின்மை «Laïcité» என்ற கோட்பாடும் எழுதப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையானது நகரசபையின் ஏகமனதான முடிவுக்கு உள்ளாக்கப்படாமல் செய்யப்பட்டுள்ளதாக கருத்துக்கள் தெரிவிக்கின்றன.

நகரசபையின் எதிர்க்கட்சி, UMP கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் அப் பிரதேச ஆணையாளரும், இந்த மாற்றமானது அரசியல் சட்டத்திற்கு முரணானதாக உள்ளதென்று கருத்துத் தெரிவித்துள்ளனர். 1789 ம் ஆண்டு புரட்சியின் பின்னர் உருவாக்கப்பட்ட சமத்துவம் - சகோதரத்துவம் - சுதந்திரம் என்ற கோட்பாட்டினை மாற்ற அல்லது திருத்த முயற்சிக்கின்ற வகையில் இது அமைவதால் மேலும் விவாதத்திற்குரிய பொருளாக மதச்சார்பின்மை அமைய உள்ளது. ❍

கிருஷ்ணா அச்சகம்

தரம் - குறித்த தவணை - நியாயவிலை

திருமண, பிறந்தநாள், பூப்புனித நீராட்டுவிழா அழைப்பிதழ்கள்,
வர்த்தக விளம்பரங்கள் மற்றும் சகலவிதமான அச்சுப்பதிப்பு வேலைகளுக்கும்,
மொழிபெயர்ப்பு தேவைகளுக்கும் நாடுங்கள்!

☎: 01 42 51 29 92 Fax : 01 42 51 35 25
E-mail: krishnafrance@yahoo.com



73, Rue Doudeauville - 75018 PARIS Métro : CHÂTEAU ROUGE

இப்படியுமா?

பிரான்ஸின் பான்ட்செயின்ட் எஸ்பிரிட்ட கிராமம். 1951 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 16 ஆம் நாள். தனது வயிற்றினை பாம்பு கடித்து குதறுவதாக கதறிக் கொண்டே நீரில் மூழ்கி இறந்து போகிறார் ஒருவர். பதினொரு வயது பேரன், தனது பாட்டியின் கழுத்தினை நெரித்துக் கொல்ல முயல்கின்றான். மற்றொருவரோ, கால்வழியே இறங்கி தப்ப முயலும் தனது இதயத்தை மீண்டும் பிடித்து உடலிற்குள் வைத்து தைத்துவிடுமாறு டாக்டரிடம் கெஞ்சுகின்றார். ஊரில் அனைவருக்கும் பைத்தியம் பிடித்தது போல் ஒரே அல்லோல கல்லோலம்.

காலை முதல் மாலை வரை என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பது அறியப்படாமலே ஐந்து பேர் இறந்தனர். நூறிற்கு மேற்பட்டோர் பைத்தியம் எனக் கருதப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இத்தனைக்கும் காரணம் அமெரிக்கா நடாத்திய ஒரு இரகசிய மருந்து சோதனைதான் என்பது தற்போது தெரியவந்திருக்கின்றது.

எலிகள், முயல்களில் ஆரம்பிக்கும் மருந்து ஆய்வு இறுதியாக எந்த நோய்க்கான மருந்து கண்டுபிடிக்கப்படுகின்றதோ அது தொடர்பான சில நோயாளிகளிடம் நடைபெறும். இதுதான் உலக வழக்கம். அவ்வாறு நடாத்தப்பட்ட ஒரு ஆய்வுதான் இது. ஆனால் மாறாக இதுபற்றி எதுவும் அறியாத அப்பாவி மக்களிடம் பரீட்சிக்கப்பட்டது. மருந்தின் பெயர் எல்எஸ்டி. மருந்து நிறுவனம் சாண்டோஸ் இரகசியமாக தயாரித்த மைண்ட் கன்ட்ரோல் மருந்து. அதாவது மூளையைக் கட்டுப்படுத்தும் மருந்து. இதை ரொட்டிமாவில் சேர்த்து சோதனை நிகழ்த்தியதன் விளைவுகளே அன்றைய களேபரம்.

இம் மருந்து தயாரிப்பாளரான சயின்டிஸ்ட் பிராங்க் ஒல்சன் 1953ஆம் ஆண்டு 13வது மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டார். இவரின் தற்கொலைக்கான காரணத்தினை ஆராய்ந்த பத்திரிகையாளர் அல்பரெல்லி 58 ஆண்டுகளின் பின் 2009 இல் இந்த களேபர நிகழ்விற்கான இரகசியக் காரணத்தினை கண்டறிந்தார்.

இன்றும் கூட ஏழை நாடுகளில திடீரென கொத்துக்கொத்தாக மக்கள் செத்து விழுகையில் அதன் பின்னணியில் இதுபோன்ற ஏதாவது ரகசிய மருந்து சோதனைகள் உலகளவில் நடந்து கொண்டிருக்கலாம் என்ற ஐயப்பாடு எழுவது தவிர்க்க முடியாததே.

தகவல் : வீ.ஆர்

2011 முதல் பறக்கும் கார்கள்!

வீதியில் ஓடக் கூடியதாகவும் ஆகாயத்தில் பறக்கும் வகையிலான கார் ஒன்றினை உலகிலேயே முதன்முதலாக அமெரிக்க நிறுவனம் தயாரித்து வருகின்றது. அமெரிக்காவைச் சேர்ந்த டெராப்யூஜியாஸ் என்னும் நிறுவனம் பறக்கும் காரைத் தயாரிக்கவுள்ளது.



இறக்கைகளுடன் தயாரிக்கப்படும் இந்தக் கார், வீதியால் செல்லும் போது சக்கரங்களையும், பறக்கும் போது மடிக்கப்பட்ட இறக்கைகளை விரித்துக் கொண்டும் செல்லும். அதிக கனமில்லாமல், எளிதில் இயங்கக் கூடிய விளையாட்டு விமானம் போன்று காணப்படும் இந்த விமானக் காரை, பயிற்சி பெற்ற யார் விரும்பினாலும் ஓட்டலாம். இரண்டு பேர் மட்டுமே பயணிக்கக் கூடிய இவ் வாகனம் வீட்டில் இருந்து விமான நிலையம் வரை காராக செல்லும். விமான நிலையத்தை அடைந்தபின் அங்கிருந்து விமானம் போன்று விண்ணில் பறந்து செல்லும். விமான நிலைய கட்டுப்பாட்டில் மற்ற விமானங்கள் இயங்குவது போலவே இக் கார் விமானமும் இயங்கும். பறந்து செல்கையில் மோசமான வானிலை, புயல், காற்று போன்ற இடர்பாடுகள் ஏற்பட்டால், குறைந்த கால இடைவெளியில் வீதியில் இறக்கிவிடலாம். அதேசமயம் வீதியில் சென்று கொண்டிருக்கும் கார் தேவைப்படின் 30 விநாடிக்குள் பறக்கும் தன்மைக்கு மாறும்.

அரசிடம் முறையாக அனுமதி பெற்று விற்பனை செய்ய கார் தயாரிப்பு நிறுவனம் முடிவு செய்து, மாதிரி ஒன்றினை தற்போது அனுமதிக்காக அனுப்பி வைத்துள்ளது. அமெரிக்காவில் வெள்ளோட்டம் விடப்படும் இந்த நவீன கார், மிக விரைவில் சர்வதேச ரீதியில் வரவேற்பைப் பெறும் என நம்பப்படுகின்றது. 2011 ஆம் ஆண்டு முதல் இக் கார் அதிகார பூர்வமாக விற்பனைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பிராங்கில் இருந்து ஈரோ

ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகளில் இங்கிலாந்து தவிர மற்றைய நாடுகள் 2002 தை 1ஆம் திகதியில் இருந்து தங்கள் நாணயங்களை கைவிட்டு ஈரோ என்கின்ற நாணயத்திற்கு மாறின. அவ்வேளையில் இத்தாலி நாணயமான லீராவில் இருந்து ஈரோவிற்கு மாறும் போது 1000 மடங்கு வரையில் வித்தியாசம் இருந்தது. இதனால் இத்தாலி மக்கள் தங்கள் கடும் அதிருப்தியை அவ்வேளையில் தெரிவித்திருந்தனர்.

தற்போது எட்டு வருடங்களின் பின் எடுக்கப்பட்ட புள்ளிவிபரங்களின் படி 69% மான பிரெஞ்சு மக்களும் 6,5875 பிராங்க் ஒரு ஈரோவாக மாறியிருப்பதற்காக தாங்கள் மனம் வருந்துவதாக தெரிவித்துள்ளனர்.

மேரி மாதா படத்தில் இருந்து கண்ணீர்!

பிரான்ஸ் காரஜ் லே கோணேஸ் பகுதியைச் சேர்ந்தவர் ஈசாத் அல்டின் பாக்லு. இவரது மனைவி செவின். கடந்த 2006-ம் ஆண்டு பிறந்த நாளின் போது இவருக்கு லெபனானை சேர்ந்த ஒரு கிறிஸ்தவ பாதிரியார் மேரி மாதா உருவப்படத்தை பரிசாக வழங்கினார்.

அந்த படம் சுமார் ஒரு அடி உயரம் உடையது. கடந்த மாதம் (பெப்ரவரி) 12-ந் தேதியில் இருந்து அந்த படத்தில் உள்ள மேரி மாதாவின் கண்களில் இருந்து எண்ணை போன்று கண்ணீர் வழிய தொடங்கியது.

தொடக்கத்தில் இதை அறிந்த அக்கம்-பக்கத்தினர் வந்து ஆச்சரியத்துடன் பார்த்து சென்றனர். மேரி மாதா படத்தின் முன்பு மனம் உருக பிரார்த்தனை செய்தனர்.

இந்த தகவல் காட்டுத்தீ போன்று பரவியது. உடனே பாரீஸ் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து தினமும் 50 முதல் 100 பேர் வரை வந்து பார்த்து செல்கின்றனர்.

இச் சம்பவம் பிரான்ஸ் மட்டுமின்றி ஐரோப்பா கண்டம் முழுவதும் பெரும் பரபரப்பாக பேசப்படுகிறது..

இத்தாலியில் உள்ள சிசிலி நகரில் நினைத்துப்பார்க்க முடியாத அளவிற்கு நிலச்சரிவு - விலகல் ஏற்பட்டது. அடுக்கடுக்காய் வரும் இயற்கை அனர்த்தங்களால் உலகம் மிரண்டுபோய் இருக்கிறது. வரும் 2012 ஆம் ஆண்டில் உலகம் அழியப்போகிறது என்ற மிரட்டல் வேறு. இது சிலரையாவது கலக்கம்கொள்ளத்தான் செய்கிறது.

ஆனால் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம் இன்னும் 450 கோடி ஆண்டுகளுக்கு உலகம் அழியாது என்று தைரியம் தருகிறார் விஞ்ஞானி அய்யம்பெருமாள். சூரியனில் இருந்துதான் கிரகங்கள் தோன்றி பிரபஞ்சத்தில் இயங்கி வருகின்றன. சூரியன் தோன்றி 450கோடி ஆண்டுகள் ஆகின்றன. சூரியனில் இருந்து வினாடிக்கு 750 தொன் ஹைட்ரஜன் ஆவி வெளியாகி 746 தொன் ஹீலியமாக வெளிப்படுகின்றது. மீதமுள்ள 4 தொன் ஒளியாகவும், வெப்பமாகவும் வெளிப்படுகின்றது.

விஞ்ஞானிகளின் அதிநுட்ப ஆராய்ச்சியில் இன்னும் 450 கோடி ஆண்டுகளுக்கு உலகம் அழிவதற்கு வாய்ப்பேயில்லை. பலர் கூறுவது போல் 2012 இல் கண்டிப்பாக உலகம் அழியாது. 2020 ஆம் ஆண்டு ஒரு குறுங்கோள் பூமியைத் தாக்கும் என்று கூறுகின்றார்கள். அவ்வாறு தாக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை. குறுங்கோள் இடம்பெயர்ந்து பூமியைத் தாக்கும் நிலை ஏற்பட்டால் அக்னி ஏவுகணை மூலமாக குறுங்கோளை பொடிப்பொடியாக தகர்க்கும் சக்தி உலக ஆய்வுகூடத்தில் உள்ளது. ஆகவே எந்த சூழ்நிலையிலும் பூமிக்கு ஆபத்து ஏற்படாது என்றார்.

பிரான்ஸில் பாவனையிலுள்ள சில மருந்துப் பொருட்களிற்கான சலுகை குறைக்கப்படுகிறது!

200 மருந்துப் பெருட்களுக்கான சலுகை 01.04.2010 மாதம் தொடக்கம் குறைக்கப்பட்டுள்ளது. அதாவது 200 மருந்து பொருட்களுக்கான சலுகை 15% - 35% வரை குறைக்கப்பட்டுள்ளது இதன் மூலம் 23,6 கோடி ஈரோக்கள் சேமிக்கபடும் என சமூக பாதுகாப்பு நிதியம் தெரிவித்துள்ளது. இப்படி சலுகை குறைக்கப்பட்ட மருந்துகளில் தோலில் ஏற்படும் ஊராய்வு காயத்திற்கு பூசப்படும் சிவப்பு மருந்து Betadine, இருமலுக்கு பாவிக்கும் Toplexil, மூக்கை சுத்தப்படுத்தும் Rhinofluimucil, நெஞ்செரிவுக்கு குடிக்கும் Gaviscon sirop, தடிமன் மற்றும் மூக்கடைப்பு போன்றவற்றிற்கு பாவிக்கும் RhinAdvil ஆகியன உள்ளடங்கும்

❍

ரூபி

பெறுமதிமிக்க உங்கள் வீடியோ பிரதிகளை நீண்ட காலத்திற்கு பாதுகாக்க விரும்புகின்றீர்களா? சீடி தட்டுக்களில் இலகுவாக மாற்றித்தருகிறோம்.

மற்றும்

உங்கள் போட்டோ கொப்பி தேவைகளுக்கும் எம்மை நாடுங்கள்!

10, RUE LABAT - 75018 PARIS
M°: Marcadet Poissonniers
Tél.: 01 42 51 80 78

பாரிஸ் மாணிக்கவிநாயகர் கும்பாபிஷேகம்

பாரிஸ் ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலயத்தின் கும்பாபிஷேகம் எதிர்வரும் 18.04.2010 அன்று நடைபெறுகிறது.

ஆலயத்தின் புதிய முகவரி :
17 Rue Pajol, 75018 PARIS
Métro : La Chapelle / Gare du Nord

மேலதிகவிபரங்களுக்கு
Tel.: 01 40 34 21 89
Website : http://www.templeganesh.fr
Email – srimanicka@yahoo.fr

பல மொழிகள் தெரிந்தால் மூளை கூர்மையடையும்.

உங்கள் குழந்தைக்கு ஒன்றுக்கு மேலான மொழிகள் தெரிந்திருக்கின்றதா? ஆம் எனில் நிச்சயம் அதன் மூளை படு துரிதமாக இருக்கும் என்று புதிய ஆய்வு ஒன்று தெரிவிக்கின்றது.

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகள் தெரிந்திருக்கும் குழந்தைகள் மிக எளிதாகப் பிரச்சினைகளுக்கு முடிவுகண்டுவிடுகின்றார்களாம்.

வளரிளம் பருவத்தில் இரண்டாவது மொழி தெரிந்திருந்தால் அது தாய்மொழி நடையில் பாதிப்பை ஏற்படுத்தும். பல்வேறு வார்த்தைகள் தெரிந்திருப்பதால் பேசிய வார்த்தைகள் திரும்பவும் வராது. தாய்மொழியில் வார்த்தையைத் தேடும் போது இருக்கும் வேகத்தை விட, இரண்டாவது மொழி தெரிந்திருப்பவரின் மூளை இன்னும் வேகமாக வார்த்தைகளைத் தேடும். தாய்மொழியில் வாசித்துக் கொண்டிருக்கும் போது இரண்டாவது மொழியின் வார்த்தைகளும் நினைவில் ஊடாடும்.

ஒன்று அல்லது இரண்டு மொழிகள் பேசுபவரிடமிருந்து பல மொழிகள் பேசுபவரை நாம் அடையாளம் கண்டுகொள்ள முடியும். மேலும் இவர்களின் மூளைச் செயல்பாடுகளிலும் வித்தியாசம் காணப்படும். பல நாடுகளில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளைக் கற்றுக்கொள்ளும் வகையில் கல்வி முறை அமைந்துள்ளது. சிறுவயதிலேயே இரண்டு மொழிகளில் பேசவும் எழுதவும் கற்பிக்கப்படுகின்றது. இதுபோன்று இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகள் தெரிந்திருப்பதால், சிறுவயதிலிருந்தே முதுமை வரை பல நலன்கள் கிடைக்கின்றன. ஏழு அல்லது எட்டு வயதில் வேறு மொழியைப் பயில ஆரம்பிப்பதால் அதைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் போலவே பேசி எழுத முடியும். அதேபோல் வயதான காலத்தில் ஏற்படும் புத்தி தடுமாற்றம் போன்ற நோய்களும் தாக்காது. இவ்வாறு அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ❍

முட்டாள்கள் தினம் !

‘C’est quoi ça?’

ஏப்ரல் முதலாம் நாள் முட்டாள்களின் நாளாக உலகம் முழுவதும் உத்தியோகப்பற்றற்ற முறையில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இலங்கையிலும் பாடசாலை சீருடைகளில் மை தெளித்து நாம் கொண்டாடி ஆசிரியர்களிடம் அடிவாங்கியதும் நினைவுக்கு வருகிறது.

இந்நாள் எவ்வாறு எப்போது ஆரம்பமானது என்பதில் தெளிவான வரலாறு இல்லாதபோதும் பிரான்ஸ் நாட்டிலேயே இது முதன்முதலில் அனுசரிக்கப் பட்டதாகத் தெரிகிறது.

16ம் நூற்றாண்டு வரை ஐரோப்பாவின் பல நாடுகளில் ஏப்ரல் 1 இலேயே புத்தாண்டு தினம் கொண்டாடப்பட்டு வந்தது. பின்னர் 1582ம் ஆண்டளவில் அப்போதைய போப்பாண்டவரான 13வது கிரகரி (Pope Gregory XIII) அவர்கள் பழைய ஜுலியன் (Julian Calendar) ஆண்டுக் கணிப்பு முறையை ஒதுக்கி புதிய கிரேகோரியன் ஆண்டுக் கணிப்பு முறையை நடைமுறைப்படுத்தினார். இதன்படி ஜனவரி 1 அன்று தான் புத்தாண்டு ஆரம்பமாகின்றது.

எனினும் இந்தப் புதிய புத்தாண்டு தினத்தை ஐரோப்பிய தேசங்களும், அவற்றின் மக்களும் உடனேயே ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்குச் சில காலம் எடுத்தது. பிரான்ஸ் 1552ம் ஆண்டிலும், ஸ்கொட்லாந்து 1660ம் ஆண்டிலும், ஜேர்மனி, டென்மார்க், நோர்வே போன்ற நாடுகள் 1700ம் ஆண்டிலும், இங்கிலாந்து 1752ம் ஆண்டிலும், இந்தப் புதிய புத்தாண்டு தினத்தை உத்தியோக பூர்வமாக ஏற்றுக் கொண்டன.

புதிய வழக்கத்தை ஏற்றுக் கொண்டு ஜனவரி முதலாம் திகதியை புத்தாண்டாகக் கொண்டாடத் தொடங்கிய மக்கள் இந்த பழைய வழக்கத்தைப் பேணி ஏப்பிரல் மாதம் முதல் தேதியில் புத்தாண்டைக் கொண்டாடுபவர்களை ஏப்பிரல் முட்டாள்கள் என்று அழைத்தார்கள். இதிலிருந்தே ஏப்பிரல் முட்டாள்கள் தினம் ஆரம்பமாயிற்று என்பது பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆய்வுகளில் ஒன்று. எனினும் 1582ம் ஆண்டுக்கு முன்னரேயே 1508ம் ஆண்டில் பிரான்ஸ் தேசத்தில் முட்டாள்கள் தினம் கொண்டாடப்பட்டு வந்துள்ளது என்பதற்கும் சான்றுகள் உண்டு. அதேபோல் டச்சு மொழியிலும் 1539ம் ஆண்டுக் காலப்பகுதியில் முட்டாள்கள் தினம் பற்றிச் சொல்லப் பட்டிருப்பதை அறியக் கூடியதாக உள்ளது.

1466ம் ஆண்டு மன்னன் பிலிப்பை அவரது அரச சபை விகடகவி, பந்தயம் ஒன்றில் வென்று மன்னனையே முட்டாளாக்கிய நாள் ஏப்பிரல் முதலாம் தினம் என்றும் கூறப்படுகிறது.

ஜனவரி மாதம் 1ம் தேதியை புத்தாண்டாக ஏற்றுக் கொள்ள மறுத்தவர்கள் அல்லது மறந்தவர்களுக்கு முட்டாள் தனமான பரிசுகளை அனுப்பினர். பெரிய பரிசுக் கூடைகள் போன்று வடிவமைத்து உள்ளே குதிரை முடி, பழைய குப்பை என்று நிரப்பிக் கொடுத்து ஏமாற்றுதல் போன்ற ஏமாற்று வேலைகளைச் செய்து ஏமாற வைத்தனர். இதை நம்பும்படியான, ஆனால் நகைக்கும்படியான செயலாக செய்து மகிழ்ந்தனர்.

‘POISSION D’AVRIL’

பிரான்ஸில் ஏப்ரல் முதல் நாளை, *“Poission d’avril”* என்று அழைக்கின்றனர். அத்தினத்தில் பிரெஞ்சுக் குழந்தைகள் காகிதத்தில் மீன் செய்து தனது சினேகிதர்களின் முதுகில் ஒட்டி அனுப்பிக் கேலி செய்கின்றனர். இப்படி முதுகில் மீனோடு திரிகிற குழந்தைகளைப் பார்க்கும் குழந்தைகள் “ஏப்ரல் மீன்” *(Poission d’avril)* என்று கேலி செய்து மகிழ்கின்றனர். 16ம் நூற்றாண்டில் 13வது கிரகரியின் உத்தரவுப்படி ஏப்ரல் மாதத்தில் குறிப்பிட்ட சில நாட்களுக்கு (முஸ்லீம்கள் நோன்பு இருப்பதைப்போல்) இறைச்சி வகைகளை உண்ணக்கூடாதென்றும் மீன்களை மட்டுமே உண்ணவேண்டு மென்றும் உத்தரவிட்டார். அதன்படி அக்காலத்தில் உறவினர் நண்பர்களுக்கு மீன்வகைகளேயே மக்கள் கொடுத்தார்கள். (தைப்பொங்கல் காலத்தில் நாம் உறவினர் நண்பர்களுக்கு தைப்பொங்கல் பலகார வகைகள் கொடுப்பதைப் போன்று). தற்பொழுது ஏப்ரல் முதலாம் திகதி பிள்ளைகள் உறவினர், நண்பர்களுக்கு பணமாக கொடுக்கின்றனர். (நாம் புதுவருடத்திற்கு கை விசேசம் கொடுப்பதைப்போல்) இந் நடைமுறை தற்போதும் வழக்கத்தில் உள்ளது. பிரெஞ்சு மக்களுக்கு கூட என்ன காரணத்திற்காக எவ்வாறு இது தோன்றியது என்பது தெரியாமல் இத்தினத்தை கொண்டாடி மகிழ்கிறார்கள்.

இத்தகைய கேலிக் கூத்துக்கள் சுற்றிச் சுழன்று பிரான்சிலிருந்து இங்கிலாந்துக்கும் அங்கிருந்து அமெரிக்காவுக்கும் *April Fool day* (அமெரிக்காவில் *All Fool day* என்றும் அழைப்பார்கள்) விரிந்து பரவி இருக்கிறது. இது குறித்து சிக்காகோவில் உள்ள இல்லிநாய்ஸ் பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியர் ஸ்டீவன் பேன்னிங் ஐரோப்பாவில் எப்படி எல்லாம் நடந்தது என்று விலாவாரியாகக் குறிப்பிட்டுள்ளார். Pope Gregory யின் காலண்டரை ஏற்றுக் கொண்ட முதல் நாடாக பிரான்சு இருந்தாலும் இத்தகைய கேளிக்கைகளின் ஆணிவேரைக் கண்டுபிடிக்கப் போதுமான ஆதாரக் குறிப்புகள் இல்லை என்றும் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

- தொகுப்பு : பிரேம்

உங்களுக்குத் தெரியுமா?

Cartoon எப்படி வந்தது..?

இன்று பத்திரிகைகளில் வரும் Cartoon (கேலிச்சித்திரம்) எப்படி வந்தது என்று தெரியுமா?

இத்தாலி மொழியில் Cartoon என்பது கெட்டியான காகிதத்தைக் குறிக்கும்.

கெட்டியான காகிதங்களில் தான் அப்போது அங்கே ஓவியங்கள் வரைவார்கள்.

1921 ம் ஆண்டில் பிரிட்டனின் புதிய பாராளுமன்றக் கட்டடத்தை அலங்கரிக்க ஓவியர்களிடையே போட்டி ஒன்று நடாத்தப் பட்டது. அந்தப் போட்டிக்காக (கெட்டியான காகிதங்களில்) வரையப்பட்ட பல ஓவியங்கள் நிராகரிக்கப்பட்டன.

கேலிச் சித்திரங்கள் போன்று இருந்த – நிராகரிக்கப்பட்ட சில ஓவியங்களை பஞ்ச் என்ற பத்திரிகை ஒன்று பஞ்ச் Cartoon என்ற தலைப்பில் ஒவ்வொன்றாகப் பிரசுரித்தது.

காலப் போக்கில் இவ்வித கேலிச்சித்திரங்களுக்கு Cartoon என்ற பெயர் நிலைத்து விட்டது.



இளைப்பாறும் வயது பிரான்ஸில் அதிகரிப்பு

பிரான்ஸில் இளைப்பாறுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதன் காரணமாக பிரெஞ்சு அரச ஓய்வூதியக் கொடுப்பனவு அமைச்சிற்கு பாரியநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

தொழிலாளர்களின் ஊதியத்திலிருந்து பெறப்படும் ஒருபகுதி நிதியிலிருந்தும், தொழில் வழங்குனரிடமிருந்து அறவிடப்படும் ஒருபகுதி நிதியிலிருந்தும் இவ் ஓய்வூதியத்திட்டத்திற்கான நிதி பெறப்படுகிறது. எனினும் ஓய்வூதிய திட்டத்திற்கான போதியளவு நிதி கிடைக்காத காரணத்தினால் அரச ஓய்வூதியக் கொடுப்பனவு அமைச்சிற்கு கோடிக்கணக்கான ஈரோக்கள் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கின்றது.
பிரான்சில் வேலை செய்பவர்களின் எண்ணிக்கையைவிட இளைப்பாற்றுச்சம்பளம் பெறுவோரின் எண்ணிக்கை வருடாந்தம் அதிகரித்து வருவதாலேயே இந்நெருக்கடி ஏற்படுவதாக பிரெஞ்சு அரசாங்கம் கவலைஅடைகிறது.

2006 ஆம் ஆண்டில் 100 ஓய்வூதிய பெறுநருக்கு 182 வேலைசெய்வோர் சம்பளத்தில் இருந்து பிடித்தம் செய்யப்பட்டது. ஆனால் 2050 இல் 100 பேருக்கு 121 பேர்தான் வேலைசெய்வார்கள் என கணிப்பிடப்பட்டுள்ளது.
ஓய்வுபெறும் வயதெல்லையை படிப்படியாக உயர்த்தி அதனை 63,5 ஆக்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது. எனினும் இத்திட்டத்திற்கு தொழிற்சங்கங்களும் எதிர்கட்சிகளும் எதிர்ப்புத் தெரிவித்திருப்பதால் உடனடியாக அமுலுக்கு வர தாமதிக்கும் இச் சட்டம் செப்ரம்பர் 2010 இல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உங்கள் வரவு நல்வரவாகுக!

Rue Doudeauville

பாரிஸ் நகரவீதிகள், பாதுகாப்பு மற்றும் பாதசாரிகளின் வசதி போன்றவற்றைக் கருத்தில் கொண்டு அவற்றை மேம்படுத்தி வருகின்றன. அந்தந்த நகரசபை நிர்வாகங்கள் இவற்றைச் செய்து வருகின்றன.

சில மாதங்களாக திருத்தவேலைகள் நடைபெற்று பாரிஸ் 18 நகரபிதா அவர்களால் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. வீதிகளில் மரங்கள் நாட்டியும், கூடியளவு மின்விளக்குகளால் ஒளியூட்டியும், **Château Rouge** பகுதியிலுள்ள பாரிஸ் 18இல் அமைந்திருக்கும் இவ்வீதி அழகுபடுத்தப் **Rue Doudeauville** வீதியும் பட்டிருக்கிறது.

கிருஷ்ணா அச்சகம்

73, Rue Doudeauville - 75018 Paris
M°: Château Rouge
Tél.: 01 42 51 29 92

விமான நிலைய சோதனை

Paris CDG இல் இருந்து அமெரிக்கா செல்லும் பிரயாணிகள் ஒரு புதுவித பாதுகாப்பு கெடுபிடிக்குள் அகப்பட்டுள்ளனர் அதாவது CDG-2E விமானநிலையத்தில் இருந்து USA செல்லும் பிரயாணிகள் ஒரு புதுவித பாதுகாப்பு கருவிமூலம் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர் (Le Scanner Corporel) பயங்கரவாத நடவடிக்கைக்கு எதிராக பயன்படுத்த இக்கருவி பொருத்தப்பட்டுள்ளது. இக்கருவி பயணிகள் அணிந்து செல்லும் ஆடைகளை ஊடுருவி அதனுள் மறைத்து எடுத்து செல்லும் பொருட்களை காட்டி கொடுத்து விடும். அதாவது இக்கருவி பயணிகளை நிர்வாணமாக காட்டும் திறன் கொண்டது. இக்கருவிமூலம் பதிவு செய்யப்படும் படங்கள் குறிப்பிட்ட நேரம் மட்டும் சேமித்து வைக்கப்படும். இக்கருவியின் பெறுமதி 150.000 மில்லியன் ஈரோக்கள்.

இக்கருவி உலகின் பிறநாடுகளிலும் பொருத்தப்பட்டுள்ளது உதாரணமாக Hollande, Suisse, Moscou, Saudi-Arabia, London-Luton, மற்றும் அமெரிக்காவின் மிகப்பெரிய பத்து விமானநிலையங்களில் பொருத்தப்பட்டுள்ளது. அண்மையில் London விமானநிலையம் ஒன்றில் இரு முஸ்லிம் பெண்கள் இச்சோதனைக்கு உட்பட மறுத்ததனால் விமானத்தில் பயணிக்க அனுமதி வழங்கப்படவில்லை. இப்பெண்கள் மதம் மற்றும் மருத்துவத்தை காரணம்காட்டி இச்சோதனையை மறுத்திருந்தனர்.

பாரிஸில் தமிழர் நிகழ்வுகள்

- **பொங்கல் விழா**

கம்பன் கழகத்தின் மூன்றாம் ஆண்டு பொங்கல் விழாவும், செந்தமிழ்க் காவலர் சி. இலக்குவனார் நூற்றாண்டு விழாவும் 14.02.2010 Paris-Aubervilliers இடம்பெற்றது.

- **தமிழ்ச்சோலை மாலை 2009**

பிரான்சின் அனைத்து தமிழ்ச்சோலைகளும் இணைந்து வழங்கும் தமிழ்ச்சோலை மாலை நிகழ்வு 14.02.2010 ஞாயிற்றுக்கிழமை Lsc - Espace Europeen, St. Denis இல் நடைபெற்றது.

- **ஆண்டு விழா**

பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கத்தின் இரண்டாவது ஆண்டு விழா 28.02.2010 ஞாயிற்றுக்கிழமை பாரிஸ் Paroisse Saint Denys de la Chappelle மண்டபத்தில் நடைபெற்றது.

- **சலங்கை 2010**

பிரான்சின் அனைத்து தமிழ் பாடசாலைகளும் பங்குபற்றும் நடன நிகழ்வான சலங்கை 10வது நிகழ்வு 28.02.2010 இல் Rue du Montreuil - Paris இல் இடம்பெற்றது.

- **Bollywood & Hollywood show 2010**

பாரீசின் Vigneux-sur-seine இல் 28.02.2010 இலங்கை இந்திய நடன குழுக்கள் பங்குபற்றிய இந்நிகழ்வில் பல்வேறு நாட்டு இளைஞர்களும் பங்குபற்றினர்.

- **குறும்பட விழா**

07.03.2010 ஞாயிற்றுக்கிழமை பாரிஸ் Aubervilliers இல் இடம்பெற்ற குறும்பட விழா நிகழ்வில் 5 குறும்படங்கள் காண்பிக்கப்பட்டு குறும்படங்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றது.

உங்கள் இன்ரநெற் மந்தகதியில் இயங்குகிறதா? துரிதப்படுத்த ஒரு வழி! முயற்சித்துப்பாருங்கள்!

கண்விழித்தெழுந்ததும் கோப்பி குடிப்பதை விட கொம்பியூட்டர் ஓன் செய்ய வேண்டிய தேவைக்கு எங்கள் வாழ்க்கை மாறிவிட்டது. காலை வேளையில் கதிரையில் இருந்தபடி உலகம் முழுவதும் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதனை அறியும் விருப்பம் மனதில் எழ இணையத்தை திறந்தால் திறப்பதற்கே ஒரு மணித்தியாலம் எடுக்கின்றது. அந்த நேரம் வரும் எரிச்சல் இருக்கின்றதே...
உங்களிற்கு உதவ மென்பொருட்களின் உதவியின்றி இணையவேகத்தினை அதிகரிப்பதற்கான ஒரு வழி இதோ..

1. முதலில் கணினியில் Start சென்று Run என்பதனை அழுத்துங்கள்.
2. பின்னர் வரும் Run இல் gpedit.msc என தட்டச்சு செய்து Enter விசையை(enter key) அழுத்துங்கள்
3. அழுத்திய பின் policy editor என்னும் சாளரம் (window) திறக்கப்படும். இந்த சாளரத்தில் local computer policy என்பதனை அழுத்தி computer configuration என்பதனை தெரிவுசெய்யுங்கள்.
4. பின்னர் administrative templates என்பதனை தெரிவுசெய்து அதில் network என்பதனை அழுத்துங்கள்.
5. பின்னர் QoS packet scheduler என்பதனை தெரிவுசெய்யுங்கள்
6. பின்னர் தோன்றும் சாளரத்தில் இடது பக்கப் பகுதியில் limit reservable band width என்பதனை இரட்டை சொடுக்கின் (double click) மூலம் திறந்துகொள்ளுங்கள்.
7. பின்னர் தோன்றும் சாளரத்தில் (limit veservable bandwidth properties window) setting என்னும் பகுதியில் Enabled என்பதனை தெரிவுசெய்யுங்கள் (முன்னர் இதில் Not configured என்பது தெரிவுசெய்யப்பட்டிருக்கும்)
8. Enabled என்பதனை தெரிவு செய்தபின் Band width limit(%) என்னும் இடத்தில் (Zero) என்பதனை வழங்குங்கள் (அதில் ஏற்கனவே 20 ஆகக் காணப்படும்)

இப்போது பாருங்கள்! உங்கள் இன்ரநெற் வேகமாக தொழில்படுகிறதா?
இல்லையா!,
அய்யோ, தயவு செய்து என்னைப்பேசாதீர்கள்!
பஞ்சியைப்பாராது திரும்பத் திரும்ப முயற்சியுங்கள்.!
இப்படிக்கு
- தேவகி

நீங்கள் நகைப்பிரியரா?
உங்கள் நகைகள் பிரகாசமாய் ஜொலிக்கவேண்டுமா?
இதோ சிறிய டிப்ஸ்!

ஒரு தேக்கரண்டி சோப்புத்தூள், அரைத்தேக்கரண்டி மஞ்சள் தூள் இரண்டினையும் எடுத்து சிறிது நீரில் கலக்கி கொதிக்க வைத்து அதற்குள் உங்கள் தங்கநகைகளை ஐந்து நிமிடம் ஊறவிடுங்கள். பின் சிறிய பிரஷ் மூலம் தண்ணீரில் கழுவுங்கள்.
அவ்வளவுதான் உங்கள் நகைகள் புதிதுபோல் பளபளக்கும்.
வெள்ளி நகைகளாயின், சிறிதளவு புளியைக் கரைத்து உப்பு, சமையல் சோடாதூள் என்பவற்றை சிறியளவில் சேர்த்து கொதிக்கவைத்த பின் அதற்குள் நகைகளை இட்டுத்துடைத் தெடுக்கலாம்.
வெள்ளி நகைகளை அவசரமாக சுத்தம் செய்ய நேரிடின்,
தண்ணீருடன் சிறிது பால் சேர்த்து துடைத்துக் கொள்ளலாம். அல்லது பற்பசை இட்டு கழுவிக் கொள்ளலாம்.

தகவல் : பொன்னி

ஒஸ்கார் விருது

ஒஸ்கார் விருது என பரவலாக அறியப்பட்ட அகடமி விருதுகள் (The Academy Award) வருடந்தோறும் திரைப்படத் துறைக்கு Academy of Motion Picture Arts & Sciences (AMPAS) இனால் வழங்கப்படும் மிக முக்கியமான விருதாகும். உலகளவில் மிக அதிகளவிலானோர் தொலைக்காட்சி மூலம் பார்க்கும் விருது வழங்கும் விழாக்களில் முதன்மையானதாக ஆஸ்கார் விருது வழங்கும் நிகழ்வு இருக்கின்றது.
1927ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இவ் விருது வழங்கும் நிகழ்வு முதன் முதலில் 1929 மே 16 ஆம் நாள் அமெரிக்காவின் Hollywood Roosevelt Hotel இல் 270 பேருடன் இடம்பெற்றது.

அகடமி விருதுகள் ஆஸ்கார் விருதுகள் என பெயர்கொண்டு அழைக்கப்பட காரணமான உறுதியான பின்னணியை அறிய முடியாத போதிலும் 1931 இல் விருதினை பெற்ற Margret Herrick, விருது தனது Uncle Oscar (அவரது பெயர் Oscar Pierce) இனைப் போலுள்ளது என தெரிவித்திருந்ததிலிருந்து உருவாகியிருக்கலாம் என்று பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கதை உள்ளது. AMPAS இனால் அகடமி விருதுகள் அதிகாரபூர்வமாக 1939 ஆம் ஆண்டிலிருந்தே ஆஸ்கார் (Oscar) விருது என அறிவிக்கப்பட்டன.
கடந்த வருடத்திற்குரிய ஆஸ்கார் விருது வழங்கும் நிகழ்வு அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் இல் இடம்பெற்றது. அமெரிக்காவின் கலிபோர்ணியாவைச் சேர்ந்த பெண் இயக்குநர் கேத்ரீன் பிகிலோ(58) தயாரித்த தி ஹார்ட் லொக்கர் என்ற படம் சிறந்த திரைப்படம், சிறந்த இயக்குனர், திரைக்கதை, சிறந்த ஒலிக்கலவை, ஒலித்தொகுப்பு, படத்தொகுப்பு ஆகியவற்றுக்காக ஆறு விருதுகளை பெற்றுக் கொண்டது.

குறைந்த பட்ஜெட்டில் உருவாக்கப்பட்ட இப்படம் ஈராக் போரின் போது எதிரிகள் வைத்த வெடிகுண்டுகளை அகற்றும் வீரரின் கதையை அடிப்படையாகக் கொண்டது. இப் படத்தில் கதாநாயகனாக நடித்த ஜெப் ப்ரிட்ஜஸ் சிறந்த நடிகராக தெரிவுசெய்யப்பட்டார்.

சிறந்த நடிகைக்கான விருது தி பிளைன் சைட் படத்தில் நடித்த சான்ட்ரா புல்லக்குக்கு வழங்கப்பட்டுள்ளது.

கேத்ரீனின் முன்னாள் கணவரான ஜேம்ஸ் கேமருன் இயக்கிய அவதார் படத்திற்கு சிறந்த கமரா, கலைஇயக்கம், விஷுவல் எபெக்ட் ஆகியவற்றுக்காக மூன்று ஆஸ்கார் விருதுகள் கிடைத்திருந்தன.

பிரெஞ்சுத் தேர்தல்கள்

என்னதான் நடக்கிறது?

ஜனாதிபதித் தேர்தல் : ஏழு வருட ஆட்சிக் காலத்தைக் கொண்டதாக இருந்த ஜனாதிபதித் தேர்தல் 2002 முதல் 5 ஆண்டுக்கு ஒருமுறை மக்களின் நேரடியான வாக்கெடுப்பு மூலம் இடம்பெறுகின்றது. வேட்பாளர் ஒருவர் முதல் சுற்றில் 50 சதவீதத்தைப் பெறத்தவறின், இரண்டாவது சுற்று தேர்தல் நடைபெறுகின்றது. ஜனாதிபதிக்கே முழுமையான அதிகாரம் இருந்த போதும், பாராளுமன்றமும் அதிக அதிகாரம் கொண்ட ஒன்றாக இயங்குகின்றது. ஒருவர் இரண்டு முறை மாத்திரமே பிரான்ஸின் ஜனாதிபதியாக இருக்கமுடியும். இந்த ஜனாதிபதி முறைக்கான அரசியல் அமைப்புச் சட்டம் 1875 இல் ஆரம்பிக்கப்பட்டு 1946 மற்றும் 1958 இல் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அடுத்த ஜனாதிபதித் தேர்தல் 2012ல் நடைபெறும்

பாராளுமன்றத் தேர்தல் :
பாராளுமன்ற உறுப்பினராவதற்கு வேட்பாளர் ஒருவர் 23 வயதினை பூர்த்தி செய்தவராக இருக்கவேண்டும். 5 ஆண்டுகளிற்கு ஒருமுறை நடக்கும் பாராளுமன்றத் தேர்தலில் 577 உறுப்பினர்களை மக்கள் தெரிவுசெய்கின்றனர். இவர்களில் 555 உறுப்பினர்கள் பிரான்சில் இருந்தும் 22 உறுப்பினர்கள் கடல் கடந்த பிரதேசங்களில் இருந்தும் தெரிவுசெய்யப்படுகின்றனர். முதல்சுற்றில் 50% இற்கு குறைவான வாக்குகளைப் பெறும் வேட்பாளர்களில், 12.5% இற்கும் குறைவான வாக்குகளைப் பெறுபவர்கள் தேர்தலில் இருந்து நீக்கப்பட்டு ஏனையோருக்கு இடையில் இரண்டாம் சுற்று தேர்தல் நடக்கின்றது.

மாகாண சபைத் தேர்தல் :
(Election Régionale)
பிரான்ஸ் 26 மாகாணங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. அதில் கடல் கடந்து அமைந்துள்ள 4 மாகாணங்களும் அடங்கும். 26 மாகாணங்களிலும் 1880 மாகாணசபை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர். முதற்சுற்றில் 10% இற்கும் மேலதிகமாக வாக்குப் பெற்றவர்கள் இரண்டாம் சுற்றில் கலந்துகொள்ளமுடியும். 5% இற்கு கூடுதலான வாக்குகளை முதற்சுற்றில் பெற்றவர்கள் கூட்டாக இணைந்து இரண்டாவது சுற்றில் போட்டியிட முடியும். இணையும் வேட்பாளர்கள் கூட்டுச்சேர்ந்து போட்டியிடுகையில் 10% இற்கும் கூடுதலான வாக்குகளை கொண்டிருப்பதால் இரண்டாம் சுற்றில் போட்டியிட அனுமதிக்கப்படுகின்றனர்.

வட்டாரத் தேர்தல் :
Election Cantonale
பிரான்சில் 3963 வட்டாரங்களிற்கு 6 வருடங்களுக்காக உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர். இவ் வட்டாரங்களில் 3807 வட்டாரங்கள் பிரான்ஸிலும் ஏனைய 156 கடல்கடந்த பிரதேசங்களிலும் அமைந்துள்ளன. அரைவாசி பேர் தொடர்ந்தும் இருக்கத்தக்கதாக 3 வருடத்திற்கு ஒருமுறை தேர்தல் நடைபெறுகின்றது. தேர்தல் இரண்டு சுற்றுக்கள் கொண்டதாக உள்ளன.

ஐரோப்பிய பாராளுமன்றத் தேர்தல் :
ஐரோப்பாவில் உள்ள $37^{1/2}$ கோடி மக்களால் 736 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர். பிரான்சில் இருந்து 72 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர். இத் தேர்தல் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை இடம் பெறுகின்றது. நாடுகள் இணைவதைப் பொறுத்தும் சனத்தொகை மாற்றத்தைப் பொறுத்தும் உறுப்பினர்களின் தொகை மாறுகின்றது. பிரான்ஸ் 8 தேர்தல் மாவட்டங்களாக பிரிக்கப்பட்டு 69 உறுப்பினர்களும் கடல்கடந்த பிரதேசங்களில் இருந்து 3 உறுப்பினர்களுமாக 72 பேர் ஐரோப்பிய பாராளுமன்றத்திற்காக தெரிவு செய்யப்படுகின்றனர். 69 உறுப்பினர்களில் 13 உறுப்பினர்கள் île de france (பாரிஸ், அதன் சுற்றுப் பிரதேசங்கள்) தேர்தல் மாவட்டத்தில் இருந்து தெரிவுசெய்யப்படுகின்றனர். இவர்கள் விகிதாசார பிரதிநிதித்துவத்தின் மூலம் தெரிவாகின்றனர். இரண்டாவது சுற்றில்லாமல் ஒருமுறையிலேயே தேர்வு இடம்பெறுகின்றது.

செனட்சபைத் தேர்தல் :
தற்போது 343 உறுப்பினர்களைக் கொண்டதாக உள்ள செனட்சபை 2011 ஆம் ஆண்டில் நடைபெறவிருக்கும் தேர்தலைத் தொடர்ந்து 348 உறுப்பினர்களைக் கொண்டதாக அமையும்.
செனட்சபை உறுப்பினர்களின் பதவிக்காலம் 6 ஆண்டுகளாகும். 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் தேர்தலில் அரைப்பங்கு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள். அதாவது 3 வருடங்களுக்கு ஒருமுறை புதிய உறுப்பினர்கள் வருகின்றனர்.

செனட்சபை உறுப்பினர்கள், 577 பாராளுமன்ற உறுப்பினர்களாலும், பிரான்சின் 26 மாகாணங்களைச் சேர்ந்த 1880 மாகாணசபை உறுப்பினர்களாலும், மற்றும் 3963 வட்டார உறுப்பினர்களாலும் மற்றும் 142000 நகர மாநகரசபை உறுப்பினர்களாலும் தெரிவு செய்யப்படுகின்றனர். ●

அகதி
அகதியற்ற உலகிற்காக
ஆலயந்தோறும் பிரார்த்தனை!,
என்னை அகதியாக்கு என கண்ணீரோடு
பிரார்த்திக்கும் புலம்பெயர் தமிழன்!!

தாலி
பாரம்பரியம், உழவன் விதைத்து
பிடுங்கி எடுத்த மஞ்சள் பூசிய கயிறு!
நாகரீகம், கள்வன் உதைத்து
அறுத்து எடுக்கும் தங்கக்கயிறு!

இடப்பெயர்வு
சாக்குப் பையில்
இருந்த உணவும்,
தோல் பையில்
இருந்த உயிரும்
நாளாந்தம் நலிந்தது.

புலம்பெயர் வாழ்வு
கழுகுக் கூட்டுக்குள்
காக்கை முட்டைகளா?
காக்கை கூட்டுக்குள்
கழுகு முட்டைகளா ??
- சிவா

இப்படியும் நடக்கிறது

கடந்த மார்ச் 1ம் நாள் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் அமைந்துள்ள புகழ் பெற்ற சிட்னி ஒபேரா அரங்கின் முன்பு 5200 அவுஸ்திரேலியர்கள் தங்கள் ஆடைகளைக் களைந்து விட்டு அமெரிக்கபுகைப்படக் கலைஞரான ஸ்பென்சர் ருனிக் (Spencer Tunick) என்பவரது கமரா முன்பு பல வித்தியாசமான கோணங்களில் காட்சி கொடுத்தனர். இப்படி ஆடைகளைக் களைந்து விட்டு நின்றவர்கள் ஓரினச்சேர்க்கையாளர்கள் மட்டுமின்றி சாதாரணமக்களும் என்று பெருமைப்படுகிறார் புகைப்படக்காரர். அதுமட்டுமல்ல இதில் கலந்து கொண்டவர்கள் இச்செயல் தங்களது சுதந்திரத்தை வெளிப்படுத்தியதாக கூறி சந்தோஷப்பட்டுக் கொண்டனர். ●

நேரம் காலை 8.20. பாரிஸின் புறநகர் பகுதியில் அமைந்துள்ள அந்த ஆரம்ப பாடசாலை வளாகம் உற்சாகத்துடனும் புன்னகையுடனும் இயங்கத் தொடங்கிக் கொண்டிருந்தது. ஆனால் 35வயது மதிக்கத்தக்க ஓர் தமிழ் அன்பர் மட்டும் தெருவில் போய்வருவோரிடமெல்லாம் முறைப்பாடு வைத்துக்கொண்டிருந்தார். வாயில் வந்த, தனக்குத்தெரிந்த பிரெஞ்சு மொழியில் திட்டிக்கொண்டிருந்தார். உதுகள் கறுவலுகள் சாப்பாட்டுக்கு வழியில்லாமல் களவெடுத்துதிரியிற நாய்கள் என தமிழிலுமாக உணர்ச்சிவசப்பட்டு கொண்டிருந்தார். அவர் மற்ற நாட்டவர்களையும் பார்த்துப் பேசும்போது எனக்குப் பயமாகவும் இருந்தது.

விசயம் இதுதான்.
ஆரம்ப பாடசாலையில் படிக்கும் அவரது குழந்தைக்கு சக குழந்தைமாணவன் ஒருவன் அடித்துவிட்டான். முகத்தில் இலேசான கீறல்காயங்களும். குழந்தையின் முகத்தில் காயத்தைப்பார்த்தால் யாருக்குதான் கோபம் வராது? ஆனால் அதைத் தொடர்ந்து நாங்கள் எடுக்கும் நடவடிக்கைகள் பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கிவிடும் ஆபத்துக்கொண்டவை.

சிறுபிள்ளைகள், பாடசாலைச்சண்டைகளை முதலில் சிறுபிள்ளைவிவகாரங்களாக நாங்கள் பார்க்கப்பழகவேண்டும். அவற்றை நாம் பெரிசுபடுத்தக்கூடாது. ஆனாலும் காயம் என்ற அளவிற்கு அமைந்துவிட்டால் அதற்கு வகுப்பாசிரியர், பாடசாலை அதிபர் ஸ்தானத்திலிருப்பவர்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று நாம் முதலில் பார்க்கவேண்டும். இங்குள்ள பாடசாலை நிர்வாகங்களில் பிரச்சினைகள் எல்லை மீறிப்போக விடமாட்டார்கள். அதையும் மீறி எவரும் கவனம் எடுக்காது இருந்தால் நாம் பொலிஸ் முறைப்பாடு வரை போகலாம்.

இதைத் தவிர்த்து நாம் அந்தபிள்ளையின் பெற்றோருடன் சண்டைபோடுவதோ அல்லது பாடசாலை நிர்வாகத்துடன் சண்டைபோடுவதோ பிரச்சினைகளை சுமூகமாக்காது. தவிரவும் எங்கள் பிள்ளை மீதான ஓர் விருப்பற்றபோக்கையும், சகஜமாக பழகவேண்டிய குழந்தை-மாணவர்கள் மத்தியில் ஒரு இடைவெளியையுமே தோற்றுவிக்கும்.

- ஆர்.சதானந்தா

RMI - R.S.A

மீள வேலை செய்து வாழ்வதற்கான சமூக உதவி
(Revenu de solidarité active)

revenu de Solidarité active

R.S.A

இது பிரான்சில் வருமானமற்ற அல்லது மிகக் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கான சமூக நிதியம். இதைக் குடும்பநலநிதி அலுவலகத்தில் இருந்து பெறமுடியும்.

R.S.A நிதி, அரச ஒதுக்கீட்டில் இருந்து பெறப்படுவதல்ல. மாறாக பிரான்ஸில் வேலைசெய்பவர்கள் தங்கள் சம்பளத்தில் இருந்து கொடுக்கும் பணம் தான் மீள வேலை செய்து வாழ்வதற்கான சமூக உதவியாக மாறுகின்றது.

R.M.I - 25 வயதினை பூர்த்தி செய்தவர்களுக்கே முன்பு வழங்கப்பட்டது. எனினும் R.S.A இனை பெற்றுக்கொள்ள 25 வயது கடந்தவராக இருக்க வேண்டியதில்லை. அத்துடன் பெற்றோர் தங்கள் பராமரிப்பில் உள்ள குழந்தைகளை உள்ளடக்கியதாக இச் சமூக உதவியை பெற்றுக் கொள்ளலாம்.

முன்னர் நடைமுறையில் இருந்த R.M.I மற்றும் A.P.I நிறுத்தப்பட்டு, அதற்கு பதிலாக R.S.A சமூக உதவி வழங்கப்படுகின்றது.

R.S.A சமூக உதவியினை கீழ்வரும் தகமையுடையோர் பெற்றுக்கொள்ளலாம்.

1. பிரான்சில் நிரந்தரமாக வாழ அனுமதி பெற்ற வெளிநாட்டவர்கள், பிரெஞ்சுக் குடிமக்கள்.
2. R.S.A சமூக உதவி கோரும் ஒருவர் அதனை பெறக் கோருமுன்னர் உள்ள 12 மாதங்களில் 9 மாதங்கள் பிரான்ஸில் வாழ்ந்திருக்க வேண்டும்.

31.12.2010 வரையுள்ள காலத்திற்கு கீழ் குறிப்பிட்ட தொகையை R.S.A ஆக பெற்றுக்கொள்ளலாம்.

a. தனிநபர் 460,09 ஈரோக்களையும் குடும்பம் என்றால் 690,14 ஈரோக்களையும் பெறமுடியும்.
b. ஒரு குழந்தை என்றால் 690,14 ஈரோக்களையும் குடும்பம் என்றால் 828,21 ஈரோக்களையும் பெறமுடியும்.
c. இரு குழந்தை என்றால் 828,14 ஈரோக்களையும் குடும்பம் என்றால் 966,20 ஈரோக்களையும் பெறமுடியும்.
d. மேலதிக ஒவ்வொரு குழந்தைக்கும் 184,04 ஈரோக்களையும் குடும்பம் என்றால் 184,04 ஈரோக்களையும் பெறமுடியும்.

R.S.A பெறுவதற்கான விதிகள் மற்றும் உதாரணங்கள்

உங்களிற்கு வீட்டு நிதி உதவியிருந்தால் அல்லது வீட்டுக்குரிய செலவுகள் (வாடகை,கடன்) இல்லையென்றால் கிடைக்க கூடிய சமூக நிதியத்தில் இருந்து பின்வரும் தொகை கழிக்கப்படும்.

ஒருவர் என்றால் 55,21 ஈரோ
இருவர் என்றால் 110,42 ஈரோ
மூவர் என்றால் 136,65 ஈரோ

உங்களுக்கு வருமானம் இருந்தால் அதன் 62 சதவீதத்தை உங்களுக்கு கிடைக்க கூடிய சமூக உதவியுடன் கூட்டி, உங்கள் வருமானம் அதில் இருந்து கழிக்கப்படும்.

உதாரணம்

குடும்பமாக இருக்கும் ஒருவருக்கு இரண்டு குழந்தைகள் இருக்கின்றது என்று எடுப்போம். மாதம் 1000 ஈரோ வருமானமும் வீட்டு உதவியாக 123.92 ஈரோவும் கிடைக்கின்றது என வைத்தால் அவர்கள் மாதம் 325.63 ஈரோக்களை பெறமுடியும்.

எப்படி என்று பார்க்கலாமா?

கிடைக்கக் கூடிய சமூக உதவி = 966,20 + (1000 x 62%) - (1000 + 123,92 + 136,65) = 325,63

தொகுப்பு : சிறீ

ஒரு மில்லியன் யூரோவும் போதைப்பொருளும் பிடிபட்டன

ஒரு மில்லியன் யூரோ பணமும் நான்கு கிலோ கொக்காய்ன், அபின் மற்றும் கஞ்சா தானியங்கித்துப்பாக்கியுடன் பிடிபட்டன. Tremblay-en-France இல் உள்ள அடுக்குமாடி வீடொன்றில் Villepinte பொலிஸார் இவற்றைக் கைப்பற்றி இதனுடன் தொடர்புடைய நால்வரைக் கைதுசெய்துள்ளனர். இவ்வளவு பெருந்தொகையாக பணமும் போதைப்பொருளும் வீடொன்றில் கண்டுபிடிக்கப்பட்டமை பொலிஸாரின் சாதுரியம் என பரவலாகப் பேசப்படுகிறது.

துன்பம் வரும் வேளையிலே...

கணவனை ஓரிருநாட்களாக
அவதானித்த அவரது மனைவி
கேட்டார்
'ஏனப்பா இப்ப அடிக்கடி
குசினுக்குள் போய்வாறியள்'
அதற்கு அவர் சொன்னார்
'இல்லயப்பா டொக்ரர் சொன்னவர்
'சுகர்' இருக்கோண்டு
செக்பண்ணச்சொல்லி.'

- சாம்.

அல்ஜீரியா அணியின் புதிய பயிற்சியாளர் ஜிடான்!

பிரான்ஸ் நாட்டின் நட்சத்திர கால்பந்து வீரர் ஜின்டன் ஜிடான் வரும் 2010 ம் ஆண்டு உலகக்கால்ப்பந்து போட்டிகளின் பின் அல்ஜீரிய அணியின் பயிற்சியாளராக தேர்ந்தெடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த சில தினங்களுக்கு முன் நட்பு ரீதியான விளையாட்டில் பங்கேற்க சென்ற பிரான்ஸ் வீரர்களான லோரன்ட் புளோன், லில்லியான் துரம், திதியோ மற்றும் ஜிடான் போன்றவர்கள் அல்ஜீரியாவின் முன்னைய கால்பந்து வீரர்களுடன் ஒன்றுகூடலில் கலந்து கொண்டதோடு அந்நாட்டின் பிரதமரையும் சந்தித்துள்ளனர். அல்ஜீரியாவின் தற்போதைய பயிற்சியாளரான ரபா சாடானின் ஒப்பந்தம் வரும் ஜூலை மாதத்தில் முடிவுறும் நிலையில் அல்ஜீரிய அணியின் பயிற்றுவினராக ஜிடானை ஒப்பந்தம் செய்ய விருப்பம் தெரிவித்துள்ளார்.

2011 ஐ.பி.எல் தொடரில் புனே, கொச்சி ஆகிய புதிய அணிகள்

ஐ.பி.எல். இருபதுக்கு இருபது போட்டிகளில் தற்போது 8 அணிகள் பங்கேற்று விளையாடி வருகின்றன. அடுத்த ஆண்டு (2011) நடைபெற இருக்கும் ஐ.பி.எல். போட்டிகளில் பங்கேற்கும் அணிகளின் எண்ணிக்கை 10 ஆக உயர்த்தப்படுகிறது. இந்த வரிசையில் புனே மற்றும் கொச்சி ஆகிய அணிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதில் புனே அணியை சகாரா குரூப் 370 மில்லியன் அமெரிக்க டொலர்களை கொடுத்தும் கொச்சி அணியை ரெண்டர்ஸ் வோஸ் ஸ்போர்ட்ஸ் லிமிட்டட் நிறுவனம் 333.33 மில்லியன் அமெரிக்க டொலர்களை கொடுத்தும் அணிகளை தமதாக்கி கொண்டுள்ளன. கொச்சி அணியில் பிரைன் லாறா மற்றும் லான்ஸ் குலூஸ்னர் போன்ற சிறந்த வீரர்கள் புதிதாக இணைக்கப்பட்டு மேலும் IPL மெருகூட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சாதனை நாயகன் சச்சின்

ஒருநாள் போட்டியில் உலக சாதனையான இரட்டை சதம்

தென்னாபிரிக்கா மற்றும் இந்தியா அணிகளுக்கிடையிலான ஒருநாள் போட்டியில் சச்சின் டெண்டுல்கர் இரட்டை சதம் அடித்து புதிய சாதனையை படைத்துள்ளார். நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இந்தியா அணி முதலில் துடுப்பெடுத்தாடியது .இதன் படி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மட்டும் இழந்து 401 ஓட்டங்களை பெற்றது. இதில் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய சச்சின் டெண்டுல்கர் 06 சிக்சர் , 25 பவுண்டரிகள் அடங்கலாக 200 ஓட்டங்களை பெற்று புதிய சாதனை படைத்துள்ளார்.இதில் இந்திய அணி அபார வெற்றி பெற்றது.

உலகக் கோப்பையில் டேவிட் பெக்காம் இல்லை

தென் ஆப்பிரிக்காவில் நடைபெறவுள்ள உலகக் கோப்பை கால்பந்து போட்டிகளில் இங்கிலாந்து வீரர் டேவிட் பெக்காம் காயம் காரணமாக பங்கேற்க மாட்டார் என்று அந்த அணியின் பயிற்சியாளர் கபெல்லோ தெரிவித்துள்ளார். 34 வயதான டேவிட் பெக்காம், ஏ.சி.மிலன் அணிக்காக இத்தாலி லீக் கால்பந்து போட்டியில் விளையாடும்போது காயமடைந்தார். உலகக் கோப்பை போட்டிகளுக்காக தன்னை பல விதமாக தயார்படுத்தி வந்த டேவிட் பெக்காம் தற்போது விளையாட முடியாமல் போயிருப்பது ஒரு பின்னடைவே என்று கபெல்லோ அதிர்ச்சி தெரிவித்துள்ளார். இது இவரது ரசிகர்கள் மத்தியில் பெரும் கவலையையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

மீண்டும் மோட்டார் கார்பந்தய போட்டிகளில் சூமாக்கர்

மோட்டார் கார் பந்தய போட்டிகளில் இருந்து ஒய்வு பெற்றிருந்த ஜெர்மனியின் மோட்டார் கார் பந்தைய வீரரான மைக்கேல் சூமாக்கர், தான் அடுத்த ஆண்டு பார்முலா ஒன்று போட்டிகளில் மெர்சிடிஸ் அணிக்காக பங்கேற்கப்போவதாக தெரிவித்துள்ளார்.தான் முன்பு இருந்தது போலவே உறுதியுடன் இருப்பதாகவும் உலக சாம்பியன் பட்டத்தை பெற வேண்டும் என்று குறிவைத்துள்ளதாகவும் பிபிசியிடம் தெரிவித்தார். சூமாக்கர் தனது முந்தைய அணித்தலைவர் ராஸ் பிரானுடன் மீண்டும் சேரவுள்ளார். இவர்கள் ஏழு உலகப் போட்டிகளை வென்றுள்ளனர். இதில் ஐந்து பெராரி அணிக்காக பங்கேற்றபோது பெற்ற வெற்றிகளாகும்.

பிரான்ஸ் சாம்பியன்

தொகுப்பு : சிவா-பிரசன்னா

அழகாக தோன்றுவது எப்படி?

மேலும் சில குறிப்புகள்

- எப்போதும் புன்முறுவல் செய்யுங்கள்.
- இனிமையாகப் பேசுங்கள்.
- விவாதம் செய்வதைத் தவிருங்கள்
- எப்போதும் உண்மை பேசுங்கள்.
- அநியாயத்திற்கு துணைபோகாதீர்கள்.
- மற்றவரிடம் காணும் நல்ல விடயங்களை மனம் திறந்து பாராட்டுங்கள்.
- உங்களால் முடிந்த உதவியை பிறருக்குச் செய்யத் தயங்காதீர்கள்.
- நீங்கள் அழகானவர், மேன்மையானவர் என்ற எண்ணத்தை உங்கள் மனதுள் விதையுங்கள்
- உங்கள் திறமையைக்கண்டு கர்வப்படாதீர்கள்.
- எப்போதும் சுறுசுறுப்பாக இருங்கள்

இவற்றை கடைப்பிடியுங்கள்!
உங்கள் தோற்றத்திலே
எவ்வகையான மாறுதல்கள் என்பதை
பின்னர் அவதானியுங்கள்.

— ஜெகா

புளிக்கஞ்சி

உங்களில் பலர் தீராத சளிப் பிரச்சினையால் அவஸ்தைப்படலாம். இதோ உங்களுக்கான ஒரு கைமருந்து.

புளிக்கஞ்சி செய்து நன்றாகச் சுடச் சுடக் குடியுங்கள். எண்ணெய் சிறிதளவும் கிடையாது. நாவுக்கும் சுவையானது. உடலுக்கும் ஆரோக்கியமானது. கூழ் போன்ற சுவையுடையது இந்த புளிக்கஞ்சி.

தேவையான பொருட்கள் :
குத்தரிசி, கத்தரிக்காய் (சின்னகத்தரிக்காய் என்றால் நல்லது), இறால், சின்னச்சீரகம், மிளகு, சின்னவெங்காயம், பச்சைமிளகாய், பழப்புளி, முடிந்தால் முருங்கையிலை

அரிசியைக்கழுவி, தேவையான அளவு நீர்விட்டு நன்றாகக் கொதிக்கவிடவும். அரிசி முக்கால்வாசி அவிந்ததும் அதனுள் துப்பரவுசெய்த வெங்காயம், றால், பச்சைமிளகாய், சிறுதுண்டாக நறுக்கிய கத்தரிக்காய் தேவையான அளவு உப்பு என்பன சேர்த்து மீண்டும் மிதமான சூட்டில் அவியவிடவும். விரும்பினால் கரட், முருங்கை, மரவள்ளிபோன்ற மரக்கறி ஏதேனும் சேர்க்கலாம்.

ஓரளவு வெந்ததும் பழப்புளியைக் கரைத்து அதனுள் விடவும். கடைசியில் அரைத்த மிளகு சீரகம், பொடியாக்கிய வெங்காயம் சேர்க்கவும். அவ்வளவுதான்.

தகவல் : சாரா

பாரிஸில் காதலர் தினம்!

என்ன! ஆச்சரியமாக இருக்கிறதா? ஆச்சரியம் கொள்வதற்கு எதுவுமில்லை. உலகம் இப்படித்தான் பலவேறு தளங்களில் நகர்கிறது. ஓரினச்சேர்க்கை பற்றிய கருத்துப்பரிமாற்றங்கள் பிரான்சின் முக்கிய ஊடகங்களில் சர்வசாதாரணமாகவே நடைபெறுகிறது.

ஒத்த பாலியலாளர்களுக்கிடையேயான திருமணத்தை உலகின் சிலநாடுகள் சட்டப்படி அங்கீகரித்தும் விட்டன.

காதலர்தினத்தன்று ஓரினச் சேர்க்கையாளர்கள் பாரிஸ்-சென் மிசல் என்ற இடத்தில் ஒன்றுகூடி பகிரங்கமாகவே முத்தம்கொடுத்து காதலர்தினத்தைக் கொண்டாடினர்.

தம்மை சிலர் வெறுப்பாகப் பார்க்கும் நிலை மாறவேண்டும். அதற்கே இந்த பகிரங்கமுத்தம் என ஓரினச சேர்க்கையாளர்களின் அமைப்பு விடுத்த வேண்டுகோளுக் கிணங்க அவர்கள் ஐந்துநிமிடங்கள் தொடர்ச்சியாக பகிரங்க முத்தமழை பொழிந்து காதலர்தினத்தைக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

தனிமனித சதந்திரமாக இருப்பினும் இயற்கைக்கு மாறானவற்றை ஊக்கப்படுத்தக்கூடாதென சமூக வியலாளர்கள் இவ் ஓரினச் சேர்க்கையை கண்டித்துவருவதும் குறிப்பிடத்தக்கது.

அந்நியன்

முப்பது வருடங்கள். எல்லாமே வெறும் கனவுபோல.

இந்த இடர்பாடுகளுக்குள் வீடு தப்பியிருப்பதே அதிசயம்தான்.

நாட்டின் நிலை தெளிவானதை எல்லாவழிகளிலும் உறுதிப்படுத்தியபின் தாயகம் திரும்பினேன்.

நான் பிறந்து, தவழ்ந்த வீட்டில் எனது உறவுகள் யாருமே இல்லை. எனது தூரத்து உறவினர் ஒருவரின் உதவியுடன் எனது வீட்டைப்பார்க்கச் சென்றேன். வீட்டுப்படலையை அணுமித்ததும் அழுதுவிடுவேன் போல பயமாக இருந்தது.

வீட்டில் யார் யாரோ இருந்தார்கள். புதிதாக ஒரு நாய் நின்றது.

வீட்டிற்குள் நுழைய சங்கடமாக இருந்தது. பின்புற வளவிற்குச் சென்றேன். புதிய மரங்கள் என்னை அந்நியமாகப் பார்த்தன. நான் ஏறிவிழுந்த நாவல் மரத்தைக் காணவில்லை. கிணறு அப்படியே இருந்தது. துள்ளித்துள்ளி தண்ணீர் அள்ளிய கால்கள்...
இப்ப கிட்டப்போகவே பயமாக இருந்தது.

திரும்ப வீட்டுப்பக்கம் வந்தேன். இனம்புரியா வலி.
பின் புறச்சுவரையும் ஓட்டையையும் பார்த்தேன்.
சுவர் என்னைப்பார்த்து அழுவதாகப்பட்டது.

'ஆர் அம்மா உவர்? வீட்டைச்சுத்திச்சுத்திப்பாக்கிறார்?'

உள்ளே இருந்து ஒரு மழலையின் குரல் கேட்டது.

எனது நெஞ்சுக்குழி விக்கியது.

— ரா.ரா

சின்னட்டிக்கதை

நலமுடன் மகிழ்வுடன்

தமிழ் சமூகத்திலும் இப்போதெல்லாம் உளவியல் தொடர்பான ஆய்வுகள், அக்கறைகள் முன்னெழுந்து வருகின்றன. அதிலும் குறிப்பாக இலங்கையில் இவ்வாறான சிந்தனைகள் மீதான கவனக்குவிப்பு வரவேற்கத்தக்கது. பிரிவுகள், இழப்புகள், மனக்காயங்களால் நொந்துபோயுள்ள உறவுகளுக்கு உளரீதியான ஆற்றுப்படுத்தல் மிக அவசியம். இதை சரிவர உணர்ந்து அதற்கான களப்பணிகளில் இறங்கியிருக்கும் நல்லிதயம் கொண்டோரை மனதார வாழ்த்துகிறோம்.

இக் களப்பணியாளர்களுள் ஒருவர்தான் டொக்ரர் எஸ். சிவதாஸ். இவர் நலமுடன், மகிழ்வுடன் ஆகிய இருநூல்களை எழுதியிருக்கிறார். இவ்விருநூல்களும் வேலணை பழையமாணவர் சங்கம்-பிரான்ஸ் வழியாக கைக்குக் கிடைத்தன. டொக்ரர் சிவதாஸ் அவர்கள் களப்பணிகளின்போதான தன்னுடைய அனுபவங்களையும், அறிவையும் நயமானமொழியில் இந்நூல்களினூடு பகிர்ந்துகொள்கிறார். ஊர், உறவுவிட்டு தொலைதூரம் வந்திருக்கும் எமக்கு வெறும் செய்திகளாய் மட்டும்போய்விட்ட மனிதஅவலங்கள் நெஞ்சைப்பிழிய வைக்கின்றன.

இயற்கை அனர்த்தங்களால், போர்களினால் பாதிக்கப்பட்டு மூழியாக்கப்பட்டு நிர்க்கதியாகியுள்ள குடும்பங்களிற்கு - குழந்தைகளிற்கு நம்பிகையூட்டுகின்றார் - அதுவும் இயல்பானதாக. எந்தவித அரசியற் பிரச்சினைகளிற்கும் சிக்குப்படாது அதற்கு வெளியேநின்று காலத்தின் தேவையறிந்து ஆற்றும் மகத்தான பணிஇது.

இவரது நூல்களில் மகிழ்வுடன் நூலின் முற்பகுதியும், நலமுடன் நூலின் பிற்பகுதியும் அறிவுசார் விடயங்களை அதிகம் தாங்கிநிற்பதால், அப்பகுதிகள், வாசிப்பிற்கு சிலவேளைகளில் சிறிது கடினமாக அமையலாம். ஆனால் நூல்களின் ஏனையபகுதிகள் முழுவதும் இரத்தமும் சதையுமான எமது பிரச்சினைகள். ஆசிரியரிடம் காணப்படும் கவித்துவமான மொழிநடையும் இணைந்து எம்மை நெகிழவைக்கின்றன.

‘மாலைவேளை எனது மனநலப்பிரிவுக்குச் செல்லும்போது ஒரு தாய் வைத்தியசாலை வளாகத்தின் பாதையோரத்தில் தனது குழந்தையைத் தூக்கிவைத்திருந்து வருடிக்கொண்டிருந்ததை அவதானித்தேன். அருகில் சென்று பார்த்தபோது அந்த தாய்க்கு இடது கை இல்லாமலிருக்கக் கண்டேன். இது எனது மனதை மிகவும் தைத்தது. திமிறிக்கொண்டும் அழுதுகொண்டுமிருக்கும் குழந்தையை இந்தத் தாய் எவ்வாறு கையாளப்போகிறாள். இனிவரும் காலங்கள் எப்படி அமையும் என்றெல்லாம் எண்ணி மனது நைந்தது’..

‘..மன்னார் வைத்தியசாலைக்குச் சென்றேன். அங்குள்ள மனநல மருத்துவப்பிரிவுக்கு சென்றிருந்தபோது இரு கரங்களையும் யுத்தத்தின் கோரப்பிடியில் இழந்துவிட்ட சிறுவனைச் சந்தித்தேன். என்னைக்கண்டதும் அவன் எழுந்துநின்று வணக்கம் தெரிவிக்க முற்பட்டது என் மனதைச்சுட்டது’

‘மனக்காயங்களும் இடர்களும் எம்வாழ்வில் தற்காலிகமானவையே. இவற்றிலிருந்து மீண்டெழுந்து பழையநிலையை அடைவது திண்ணம். மீள்தலும், மீள எழுதலும் சாத்தியமானதே’

நூலின் சில பகுதிகளை எடுத்து அப்படியே போட்டுவிட்டாலே போதும். நூலிற்கு அறிமுகம் தேவையில்லை. ஆனாலும் நிலாவின் பக்கக்கட்டுப்பாடு காரணமாக வெறும் அறிமுகத்துடன் மட்டும் நிறுத்திவிடுகிறேன். சமூகத்தின்பால் அக்கறைகொண்டவர்கள் கட்டாயம் வாங்கிப்படிக்கவேண்டிய புத்தகம். படிப்பதோடு மட்டும் நின்றுவிடாது நூல்பற்றிய கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளவேண்டும். இது பாதிக்கப்பட்ட மக்களுக்கு பலன் சேர்க்கும். பாரிஸில் நூலினைப் பெற்றுக்கொள்ள பிரான்ஸ் வேலணை பழையமாணவர் சங்க நண்பர்களை அணுகவும்.

— அசோகா

நிலாவினைப் பெற்றுக்கொள்ள

சங்கீதா அச்சகம்
39, Bld de la Chapelle - 75010 PARIS

RUBIS
10, Rue Labat - 75018 PARIS

MAGENTA
77, Bld. de Magenta - 75010 PARIS

ASI BOUCHERIE
195, Rue du Fbg.St.Denis - 75018 PARIS

VANNI BOUCHERIS
26, Rue Perdonnet - 75010 PARIS

Fast Food Indienne
193, rue du Fbg.St.Denis - 75010 PARIS

Sachi Education
70, rue Philippe de Girard - 75018 PARIS

கிருஷ்ணா அச்சகம்
73, Rue Doudeauville - 75018 PARIS

www.nilafrance.com

நினைவு அஞ்சலி

தோற்றம்:
17.02.1954
மறைவு:
02.03.2010

தோழர் சுரேந்திரன்

தோற்றம் :
30.3.1962
மறைவு :
28.2.2010

க. நாகராசா (பிரபா)
(கொட்டடி)

தோற்றம் :
13.8.1929
மறைவு :
16.3.2010

ஆறுமுகம் யோகலிங்கம்
(பருத்தித்துறை)

தோற்றம் :
11.5.1966
மறைவு :
25.3.2010

கந்தையா கிருஷ்ணகுமார்
(நயினாதீவு)

பிரெஞ்சு வைன்

ஒருபோத்தல் 14 ஆயிரம் ஈரோ!

பிரான்ஸைச் சேர்ந்த றெமி மார்ட்டின் என்ற வைன் தயாரிப்பு நிறுவனம் தயாரித்த உயர்தர வைன் போத்தல் ஒன்று 14 ஆயிரம் ஈரோவிற்கு அடுத்த மாதம் அமெரிக்காவில் விற்பனை செய்யப்படவுள்ளது. இந்த வைனுக்கு லூயிஸ் பதின்மூன்று ரேர் காஸ்க் எனப் பெயரிடப்பட்டுள்ளது. 750 மில்லி லீட்டர் கொண்ட 786 போத்தல்கள் மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளனவாம்.

பிரான்ஸில் கிறிஸ்துவிற்கு முன் 7ம் நூற்றாண்டிற்கும் 6ம் நூற்றாண்டிற்கும் இடையில் வைன் (vin) செய்கை ஆரம்பிக்கப்பட்டது. தற்பொழுது விற்பனையில் 3022 வகையானவை இருக்கின்றன. 1960 ம் ஆண்டுவரை ஒருவர் வருடத்திற்கு 135 லீட்டர் வைனை உட்கொண்டார். தற்பொழுது அதன் தரம் குறைந்தபடியினால் 69 லீட்டரை மட்டுமே உட்கொள்கிறார்.

பிரான்சில் வைன் உற்பத்தியாகும் பிரதான இடங்கள்

Vignoble d'Alsace , Vignoble du Beaujolais , Vignoble de Bordeaux ,Vignoble de Bourgogne , Vignoble de Champagne ,Vignoble de Corse ,Vignoble du Jura ,Vignoble du Languedoc-Roussillon , Vignoble de Provence , Vignoble de Savoie , Vignoble du Sud-Ouest , Vignoble du Val-de-Loire , Vignoble de la vallée du Rhône

சிறிதளவில் உற்பத்தி செய்யும் இடங்கள்

Vignoble des coteaux du Lyonnais ,Vignoble du Bugey , Vignoble de Lorraine ,Vignoble d'Île-de-France

கீழேயுள்ள இரண்டு இடங்களிலும் தற்பொழுது உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது.

Vignoble de Normandie , Vignoble du Limousin

பிரான்ஸில் இதயநோய் தாக்கம் பெருமளவில் இல்லை என்பதும் அதற்கு வைன்தான் காரணமென்பதும் ஓர் மருத்துவ தகவல். *தகவல் : வரதன்*

அளவெட்டி – மகாஜனசபை

நடாத்தும் இலக்கியப்போட்டிகள்

அளவெட்டி நலன்புரிச் சங்கம் - சுவிஸ் அனுசரணையுடன் அளவெட்டி மகாஜன சபை கலைஞர் வட்டம் சித்திரைப் பூரணை தினத்தன்று நடாத்தவுள்ள சிறப்பு நிலாக்காலம் கலை சங்கமத்தை முன்னிட்டு கலை இலக்கிய போட்டிகள் நடாத்தப்படவுள்ளன. புலம் பெயர்ந்து வாழும் அளவெட்டி உறவுகள் மத்தியிலும் தாய் நிலத்தில் வாழும் உறவுகள் மத்தியிலும் நடாத்தப்படவுள்ள இப் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப் படவுள்ளன. இப் போட்டிகள் சிறுகதை, கவிதை, கட்டுரை மற்றும் பொது அறிவு ஆகிய விடயங்களில் நடாத்தப்பட வுள்ளதுடன் பாடசாலை மாணவர்களுக்கு பிறிதாகவும் ஏனையோருக்கு திறந்த பிரிவாகவும் நடாத்தப்படவுள்ளன. போட்டி பற்றிய மேலதிக விபரங்களை எமது இணையத்தளத்தில் காணலாம்.

கட்டுரைத் தலைப்புக்கள்.

1) அளவெட்டியும் அதன் புலமையும்
2) முழுமைகண்ட முந்தையர் வாழ்வு
3) அளவெட்டியும் அதன் அழகும்

(இணைய முகவரி : **www. alaveddy.ch**

twitter

இன்று உலகில் அதிகமானோரால் பயன்படுத்தப்படும் சமுக இணையத் தளங்களுள் பேஸ்புக்கிற்கு அடுத்தபடியாக ருவிட்டர் (twitter) என்னும் இணையத் தளம் காணப்படுகின்றது

2006ம் ஆண்டு California (usa) ஐ சேர்ந்த jack dorsey (33வயது) என்பவரால் உருவாக்கப்பட்ட இத்தளம் பேஸ்புக்கை ஒத்த உயர் தொழில் நுட்பத்தில் உருவாக்கப்பட்டுள்ளது

இந்த இணையத்தளத்தை அமெரிக்க ஐரோப்பிய இந்திய மக்களே அதிகம் பயன்படுத்துகின்றனர்

2006ம் ஆண்டு உருவாக்கப்பட்டபோதும் 2009ம் ஆண்டுமுதல்தான் அதிகளவு மக்களின் கவனத்தை ஈர்ந்தது.

2009ம் ஆண்டின் முடிவில் 100மில்லியன் மக்களை கவர்ந்த ருவிட்டர் (twitter) தற்பொழுது 2பில்லியன் மக்களை தன்னக்தே கொண்டுள்ளதோடு 2010ம் ஆண்டின் முடிவில் 4பில்லியன் மக்களை கவர்ந்து கொள்ளும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

பேஸ்புக்கை போன்று ருவிட்டரும் (twitter) மக்கள் மத்தியில் அமோக வரவேற்பை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதில் பதிவுசெய்யப்படும் படங்கள் வீடியோக்களை பாதுகாக்க அதிநவீன தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. அத்தோடு நண்பர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தியும் தொழிற்படுகிறது.

இந்த இணையத்தளத்தின் முகவரி : (www.twitter.com)

தகவல் : மருதப்பு தவயோகன்

சங்கீதா அச்சகம்

திருமணம், பூப்புனித நீராட்டுவிழா, பிறந்தநாள் அழைப்பிதழ்கள், மற்றும் அன்பளிப்பு பைகள் போன்றவை புதிய டிசைன்களில் அச்சடித்துப் பெற்றுக்கொள்ளவும், உங்கள் வர்த்தக விளம்பரங்கள் மற்றும் அனைத்து அச்சுத்தேவைகளுக்கும் நாட வேண்டிய ஸ்தாபனம்.

39, Boulevard de la Chapelle - 75010 Paris
Tél. / Fax : 01 44 72 08 94
M° : La Chapelle / Gare du Nord